Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 22/2025**

Preliminary Register

Deposition of **PW- 4 LW - 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அமுதன் | Husband Name | : | வெங்கடேசன் |
| Village | : | அவிச்சாகுடி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | தனியார் நிறுவனம், திருப்பூர் |
| Religion | : | | Age | : | 17 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of November 2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

VOIR DIRE TEST

1. எந்த வகுப்பு வரை படித்துள்ளீர்?

நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன்

2. எந்த பள்ளியில் 12ம் வகுப்பு படித்தீர்?

ஆவூரில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் 12ம் வகுப்பு படித்தேன்

3. உண்மைக்கும் பொய்யுக்கும் வித்தியாசம் தெரியுமா?

தெரியும்

4.பொய் சொல்வது சரியா தவறா?

தவறு

**<u>முதல் விசாரணை-</u>**

நான் மேற்படி முகவரியில் நிறந்தரமாக வசித்து தற்போது திருப்பூரில் தனியார் நிறுவனத்தில் வேளை பார்த்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா ஆவார். அ.சா.2 எனது அண்ணன் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது பெரியப்பா முருகானந்தம் என்பவருக்கும் ஆஜர் எதிரிகளின் குடும்பத்திற்க்கும் இடையே பிரச்சனை இருந்து வந்தது இந்நிலையில் கடந்த 05.01.2025ம் தேதி இரவு 08.00 மணியளவில் எனது அம்மா எனது சித்தப்பா ரமேஷ் என்பவர் வீட்டிற்க்கு போகும் போது ஆஜர் 1வது எதிரி எனது அம்மாவை அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். (சாட்சி ஆஜர் 1 வது எதிரி தனது அம்மாவை திட்டிய வார்த்தைகள் குறித்து நீதிமன்றத்தில் கூறுவதற்க்கு சங்கடப்படுகிறார்). அப்போது ஆஜர் 2,3 எதிரிகளும் கொச்சை வார்த்தைகளால் எனது அம்மாவை திட்டினார்கள். ஆஜர் 2 வது எதிரி கம்பியால் எனது அம்மாவை அடிக்க வந்தார். அதை அ.சா.2 எனது பெரியப்பா மகன் கபிலன் என்பவரும் தடுக்க போனார்கள் நானும் அதை தடுக்க போனேன் அப்போது 2 வது எதிரி கையில் வைத்திருந்த கம்பியால் எனது வலது கையில் அடித்து எனக்கு காயம் ஏற்பட்டது. ஆஜர் 2 வது எதிரி இப்போது தப்பித்து விட்டீர்கள் மீண்டும் மாட்டும் போது சாவடித்து விடுவேன் என்று எங்களை மிரட்டினார். நான் எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக எனது அம்மா மற்றும் அண்ணனுடன் ஆவூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அதன் பிறகு வலங்கைமான் காவல் நிலையம் வந்து நடந்த சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

ஆஜர் எதிரிகளுக்கும் எனது குடும்பத்திற்க்கும் ஏற்கனவே வாய்த்தகராறு ஏற்பட்டு முன்விரோதம் இருந்து வந்ததா என்றால் இல்லை ஆஜர் எதிரிகளுக்கும் எனது பெரியப்பாவிற்க்கும் முன்விரோதம் இருந்தது. சம்பவம் நடைபெற்ற போது நான் சம்பவயிடத்தில் இருந்தேனா என்றால் நான் எனது வீட்டில் இருந்தேன் சத்தம் கேட்டு சம்பவயிடத்திற்க்கு வந்தேன். சம்பவம் யார் வீட்டின் வாசலில் நடந்தது

என்றால் ஆஜர் 2 வது எதிரியின் வீட்டின் வாசலில் வைத்து நடந்தது. நான் சம்பவயிடம் செல்லும் போது ஊர்க்காரர்கள் திரண்டு இருந்தார்களா என்றால் இல்லை ஆஜர் எதிரிகளின் குடும்பத்தினரும் எனது குடும்பத்தினரும் இருந்தார்கள். நான் அங்கு சென்ற உடன் ஊர்க்காரர்கள் வந்து விட்டார்களா என்றால் இல்லை ஆஜர் 2 வது எதிரி என்னை கம்பியால் அடித்ததற்க்கு பின்பு தான் ஊர்க்காரர்கள் வந்தார்கள் எங்களை விலக்கி விட்டார்கள். எங்களது குடும்பதினருக்கும் ஆஜர் எதிரிகளின் குடும்பத்திற்கும் ஏற்கனவே வாய்த் தகராறு ஏற்பட்டு முன்விரோதம் இருந்து வந்தது என்றாலும் ஆகையால் எதிரிகளின் மீதுள்ள முன் விரோதத்தின் காரணமாக பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.11.06 19:34:11 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 22/2025**

Preliminary Register

Deposition of **PW-5 LW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரமேஷ் | Father Name | : | துரைசாமி |
| Village | : | அவிச்சாகுடி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06st day of November 2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>முதல் விசாரணை-</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது அண்ணி ஆவார். அ.சா.2,4 எனது அண்ணன் மகன்கள் ஆவார். அ.சா.3 எனது சித்தப்பா ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும் எனது பக்கத்து வீட்டுக்காரர். இன்றிலிருந்து ஒரு வருடத்திற்க்கு முன்பு ஒரு நாள் எங்கள் வீட்டின் சாமி கும்பிட்டோம் அதற்கு அ.சா.1 2,4 மற்றும் எனது பங்காளிகள் வந்திருந்தார்கள். அப்போது ஆஜர் 1வது எதிரி அவரது வீட்டில் பேசிக்கொண்டிருந்தார் அப்போது அ.சா.1 ஆஜர் 1 வது எதிரியிடம் யாரை பேசுகிறாய் என்று கேட்டார். அப்போது இருவருக்கும் சண்டை நடந்தது. அதை நான் பார்த்தேன் அதன்பிறகு ஆஜர் 2 வது கம்பியை தூக்கி

கொண்டு ஓடியதில் அ.சா.4க்கு காயம் ஏற்பட்டது. இது குறித்து என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

ஆஜர் எதிரிகளின் குடும்பத்திற்கும் அ.சா,1 2மற்றும் 4 ன் குடும்பத்திற்க்கும் ஏற்கனவே வாய் தகராறு ஏற்பட்டு முன்விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான். சம்பவம் எங்கு வைத்து நடைபெற்றது என்றால் ஆஜர் 1 வது எதிரியின் வீட்டின் வாசலில் வைத்து சம்பவம் நடைபெற்று பின்பு தெருவின் நடுவே நடைபெற்றது. அ.சா.4க்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்றால் ஆஜர் 2 வது எதிரியிடம் இருந்து கம்பியை கூட்டத்தில் இருந்தவர்கள் பிடுங்கி எறியும் போது அ.சா.4க்கு காயம் ஏற்பட்டது. சம்பவம் கோமதி வீட்டின் வாசலில் நடைபெற்றது பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். தெருவின் நடுவே நடைபெற்ற சம்பவம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 ,2 மற்றும் 4 எனது உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.11.06 19:34:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 22/2025**

Preliminary Register

Deposition of **PW- 6 LW-6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முருகையன் | Father Name | : | பெருமாள் |
| Village | : | மூலால்வாஞ்சேரி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | கூலி |
| Religion | : | | Age | : | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06st day of November 2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1,2,4,மற்றும் ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1,2,4,மற்றும் ஆஜர் எதிரிகளுக்கிடையே என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் நான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. இந்த வழக்க சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை -**

போலீஸ் விசாரணையில் கடந்த 07.02.2025ம் தேதி மதியம் 12 மணியவில் நானும் முருகானந்தம் என்பவரும் இவ்வழக்கின் 1 வது எதிரியின் வீட்டின் அருகில் நின்று பேசிக்கொண்டு இருந்த போது அங்கு வந்த வலங்கைமான் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் அ.சா.1,2,4 மற்றும் ஆஜர் எதிரிகளுக்கு இடையே பிரச்சனை நடந்த சம்பவயிடத்தை எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார் என்றும், அந்த பார்வை மகசரில் நானும் முருகானந்தம் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தர்ப்பில் குறுக்கு விசாரணை இல்லை;**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.11.06 19:34:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 22/2025**

Preliminary Register

Deposition of **PW-7 LW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முருகானந்தம் | Father Name | : | கலியமூர்த்தி |
| Village | : | அவிச்சாகுடி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06st day of November 2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>**முதல் விசாரணை-**</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயக் கூலியாக வேலை செய்து வருகிறேன். அ.சா.1,2,4,மற்றும் ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகளின் வீடுகள் எங்கள் தெருவின் ஆரம்பத்திலும் ரமேஷ் என்பவரது வீடு எங்கள் தெருவின் கடைசியிலும் உள்ளது. கடந்த 05.01.2025 ம் தேதி நான், அ.சா.1,3 மூவரும் ரமேஷ் என்பவரது வீட்டிற்கு சாமி கும்பிடுவதற்காக சென்றோம் அப்போது அ.சா.2 மற்றும் கபிலன் என்பவரும் ஆற்றிலிருந்து எனது வீட்டிற்க்கு வந்து கொண்டிருந்தார்கள் அப்போது நீலகண்டன் என்பவர் அ.சா.2 மற்றும் கபிலன் இருவரையும் வாங்க மாப்பிள்ளை என்று அவரது வீட்டிற்கு கூப்பிட்டார். அப்போது நீலகண்டன் வீட்டிற்க்கு சென்று கொண்டிருந்த அ.சா.2 மற்றும் கபிலனை ஆஜர் 1 வது எதிரியின்

அம்மா சந்திரா என்பவர் நீங்கள் சண்டைக்காரர்கள் தானே எனது கொழுந்தனார் வீட்டில் உங்களுக்கு என்ன வேலை என்று அசிங்கமாக திட்டினார். அப்போது அ.சா.2 , கபிலன் நீலகண்டன் கூப்பிட்டார் அதனால் பேசிக்கொண்டு இருக்கிறோம் சந்திராவிடம் சொன்னார்கள். சந்திரா அ.சா.2, கபிலனை பேசவும் அவர்கள் அங்கிருந்து அவர்கள் இருவரும் எங்கள் வீட்டிற்கு சென்று விட்டார்கள். அதன் பிறகு ரமேஷ் வீட்டிற்க்கு சென்று கொண்டிருந்த போது ஆஜர் 1 வது எதிரி கெட்டவார்த்தைகளால் பேசிக்கொண்டு இருந்தார் அ.சா.1 ஆஜர் 1 வது எதிரியிடம் எங்கள் பையன்கள் வந்தது தவறுதான் அவர்கள் தான் போய்விட்டார்களே ஏன் பேசுகிறீர்கள் என்று கேட்டார். உன்னை தான் தேடிக்கொண்டு இருக்கிறோம் என்று சொல்லி ஆஜர் 2 வது எதிரி கம்பியால் அ.சா.1 ஐ அடிக்க முற்படும் போது அ.சா.2,4 மற்றும் கபிலன் அதை தடுத்தார்கள் அதில் அ.சா.4க்க காயம் ஏற்பட்டது. அதன் பிறகு அ.சா.4 ஐ மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ளஇரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் மேற்படி கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். (பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் **அரசு தரப்பு சான்றாவனம்-2** கூறியீடு செய்யப்படுகிறது.). போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு பகுதி அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை -**

போலீஸ் விசாரணையில் கடந்த 07.02.2025ம் தேதி மதியம் 12 மணியவில் நானும் முருகையன் என்பவரும் இவ்வழக்கின் 1 வது எதிரியின் வீட்டின் அருகில் நின்று பேசிக்கொண்டு இருந்த போது அங்கு வந்த வலங்கைமான் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் அ.சா.1,2,4 மற்றும் ஆஜர் எதிரிகளுக்கு இடையே பிரச்சனை நடந்த சம்பவயிடத்தை எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும்

வரைபடம் தயார் செய்தார் என்றும், அந்த பார்வை மகசரில் நானும் முருகையன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் கூறிவிட்டு தற்போது போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

எனக்கும் ஆஜர் எதிரிகளின் குடும்பத்திற்கும் ஆஜர் எதிரிகள் வளர்க்கும் நாய் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி பிரச்சனை சம்பந்தமாக ஆஜர் எதிரிகளின் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் எனது தம்பி மனைவி ஆவார். புகார் தாரர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.11.06 19:34:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 22 /2025**

Preliminary Register

Deposition of **PW-8 LW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுப்பிரமணியன் | Father Name | : | அண்ணதுரை |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | உதவி ஆய்வாளர் வலங்கைமான் காவல் நிலையம் |
| Religion | : | | Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06st day of November 2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் தற்போது வலங்கைமான் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் 06.01.2025 ம் தேதி வலங்கைமான் காவல் நிலைய அலுவலில் இருந்த போது வலங்கைமான் அவிச்சாகுடி கீழத்தெருவைச் சேர்ந்த வெங்கடேசன் மனைவி சரஸ்வதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகரை பெற்று நிலைய குற்ற எண் 10/2025 சட்டபிரிவுகள் 296(b). 118(1), 133, 351(3) BNSன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (முதல் தகவல் அறிக்கை **அரசு தரப்பு சான்றாவனம் 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது) 07.01.2025 ம் தேதி 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று முருகையன், முருகானந்தம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை

பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன் மேற்படி (பார்வை மகசர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ. 4, 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது) பின்னர் சாட்சிகள் சரஸ்வதி, ரமேஷ், கோபால், முருகையன், முருகானந்தம் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையில் இருந்து சம்பவம் உண்மை என்பது தெரிய வந்ததால் எதிரிகளை தேடி வந்த நிலையில் 07.01.2025ம் தேதி 14.30 மணிக்கு சந்திரசேகரபுரம் ஆர்ச் அருகில் நின்று கொண்டிருந்த ஆஜர் 2 வது எதிரியை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து உரிய சட்ட நடைமுறைகளுக்கு பின்பு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இவ்வழக்கின் மற்ற எதிரிகள் இருவரும் மாண்பமை திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணையில் சென்ற விபரத்தினை தெரிந்து கொண்டேன். இவ்வழக்கின் சாட்சிகள் முகிலன் மற்றும் அமுதன் இருவரையும் 10.02.2025ம் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையில் இருந்து காயம்பட்ட நபர்கள் வலங்கைமான் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றும் அவர்களுக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என அவர்கள் மேல் சிகிச்சை எதுவும் பெறவில்லை என தெரிய வந்ததால் வழக்கின் சட்டபிரிவுகள் 296(b). 118(1), 133, 351(3) BNSன் என்பதை சட்டப்பிரிவுகள் 296(b). 133, 351(3), 131 BNS ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். (சட்டபிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது) இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 296(b). 133, 351(3), 131 BNS ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - .**

இவ்வழக்கின் புகாரினை நான் சரியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவயிடம் சென்று விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ள அனைவரும் புகார்தாரரின் நெருங்கிய உறவினர்கள் என்றால் அவர்களின் உறவு முறை பற்றி எனது விசாரணையில் அவர்கள் எதுவும்

கூறவில்லை. இவ்வழக்கில் தனி நபர் சாட்சிகள் யாரையும் நான் விசாரணை செய்யவில்லை என்றால் நான் சமபவம் நடைபெற்ற கிராமத்தில் உள்ள ஊர்க்காரர்களை தான் விசாரணை செய்தேன். நான் சாட்சிகள் யாரையும் சரிவர விசாரணை செய்யாமல் எதிர் வழக்குக்களில் பின்பற்றபடவேண்டிய நெறிமுறைகளை பின்பற்றாமல் எதிரிகள் மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் எதிரிகள்தான் உண்மையான பாதிக்கப்பட்டவர்கள் அதனை குறிப்பிடதவறிவிட்டேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.11.06 19:34:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.